## மீ:.காத்தின் (ஹஜ் உம்ராவிற்கான) கால நிர்ணயம்

உம்ரா நிறைவேற்றுவதற்காக ஆண்டு முழுவதும் இஹ்ராம் அணிந்து கொள்ளலாம், ஆனால், ஹஜ் நிறைவேற்றுவதற்காக அதற்கான குறிப் பிட்ட மாதங்கள் இருக்கின்றன, அவையாவன: ஷவ்வால், துல் ஃகஅதா மற்றும் துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள். அல்லாஹ் தஅலா கூறுகிறான்:

ٱلْحَجُّ أَشْهُرٌ مَّعْلُومَٰتٌ ۚ فَمَن فَرَضَ فِيهِنَّ ٱلْحَجَّ فَلَا رَفَثَ وَلَا فُسُوقَ وَلَا جِدَالَ فِى ٱلْحَجِّ ۗ وَمَا تَفْعَلُوا۟ مِنْ خَيْرٍ يَعْلَمْهُ ٱللَّهُ ۗ وَتَزَوَّدُوا۟ فَإِنَّ خَيْرَ ٱلزَّادِ ٱلتَّقْوَىٰ ۚ وَٱتَّقُونِ يَٰٓأُو۟لِى ٱلْأَلْبَٰبِ ﴿١٩٧﴾ (البقرة:197)

*பொருள்: ஹஜ்ஜுடைய காலம் அனைவராலும் அறியப்பட்ட மாதங்களா கும். எனவே, இம்மாதங்களில் எவரேனும் ஹஜ் கடமையை நிறைவேற்ற நாடினால், ஹஜ்ஜின்போது இச்சைகளைத் தூண்டக்கூடிய சொல், செயல் மற்றும் தீவினை, சண்டை சச்சரவு ஆகியவற்றில் ஈடுபடக்கூடாது. மேலும், நீங்கள் ஏதேனும் நன்மை செய்தால் அதனை அல்லாஹ் அறிந்தவனாகவே இருக்கின்றான். மேலும், நீங்கள் (ஹஜ்ஜுக்காக) வழித்துணைச் சாதனங் களைக் கொண்டு செல்லுங்கள். உண்மை யாதெனில், வழித்துணைச் சாத னங்களிலெல்லாம் மிக மேலானது இறையச்சம்தான். எனவே, நல்லறி வுடையோரே, எனக்கு மாறு செய்யும் போக்கிலிருந்து விலகி வாழுங்கள் (அல் பஃகரஹ்:197)*

### மீ:.காத்திற்கான (ஹஜ் உம்ராவிற்கான) இடங்கள்

இவை ஒரு ஹாஜி அல்லது உம்ரா நிறைவேற்றுபவர் இஹ்ராம் அணிந்து கொள்வதற்கான இடங்களாகும். இவை கீழ்வருமாறு:

1 **துல் ஹுலை:.பா** இது மக்காஹ் முகர்ரமஹ்வின் வடக்குப் பகுதியில் ஏறத்தாழ 450 கி.மீ தூரத்தில் உள்ளது. இது மதீனா முனவ்வரஹ்வில் வசிப்பவர்களுக்கான மீஃகாத் ஆகும்.

2 **ராபிக்** இது மக்காஹ் முகர்ரமஹ்வின் வடமேற்குப் பகுதியில் அமைந் துள்ளது, மக்காஹ்விலிருந்து ஏறத்தாழ 204 கி.மீ தூரத்திலுள்ளது. இது ஷாம் (சிரியா) மற்றும் எகிப்திலிருந்து வருபவர்களுக்கான மீஃகாத் ஆகும்.

3 **:.கர்னுல் மனாஜ்ஸில்** இது மக்காஹ் முகர்ரமஹ்விற்குக் கிழக்கில் 94 கி.மீ தூரத்திலுள்ள ஒரு மலையாகும். இது நஜ்து பகுதியில் வசிப் பவர்களுக்கான மீஃகாத் ஆகும்.

www.uzarfahi.com

**4** **யலம்லம்** இதுவும் மக்காஹ் முகர்ரமஹ்வின தெற்குப் பகுதியில் 54 கி.மீ தூரத்திலுள்ள ஒரு மலையாகும். இது எமன், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து வரும் ஹாஜிகளுக்கான மீஃகாத் ஆகும்.

**5** **த்ஜாது ஃஇர்ஃக்** இது மக்காஹ் முகர்ரமஹ்வின் வடகிழக்குப் பகுதியில் 96 கி.மீ தூரத்திலுள்ளது, இது ஈராஃக் நாட்டு மக்களுக்கான மீஃகாத் ஆகும்.

**6** **மக்காஹ்வாசிகள்** மக்காஹ் முகர்ரமஹ்வின் குடிமக்களாக இருந்தாலும் அங்கு வசிப்பவர்களாக இருந்தாலும்சரி அவர்கள் தங்களுடைய வீடுகளிலேயே இஹ்ராம் அணிந்து கொள்ளவேண்டும். அவர்கள் எந்த மீஃகாத்திற்கும் செல்லத்தேவையில்லை. இவ்வாறே, மீஃகாத்களுக்கும் மக்காஹ் முகர்ரமஹ்விற்கும் இடையிலான பகுதிகளில் வசிப்பவர்களும் தங்கள் வீடுகளிலேயே இஹ்ராம் அணிந்து கொள்ள வேண்டும்.

## இஹ்ராம் அணிதல்

ஹஜ் நிறைவேற்றுபவர்கள் மீஃகாத்திற்குச்சென்று இஹ்ராம் அணிந்து கொள்வது அவர்கள்மீது வாஜிபானதாகும். ஹரம் எல்லைக்குள் இஹ்ராம் அணியாத நிலையில் நுழைவது அனுமதிக்கப்பட்டதல்ல. எவரும் இவ்வாறு செய்துவிட்டால், அவர் மறுபடியும் திரும்பி மீஃகாத்திற்குச் சென்று அங்கு இஹ்ராம் அணிந்து தல்பிய்யா கூறிக்கொண்டு வரவேண்டும். கால நெருக்கடி அல்லது வேறு ஏதும் காரணத்திற்காக இவ்வாறு செய்ய இயலாத நிலையில், அதற்குப் பரிகாரமாக ஒரு ஆடு ஃகுர்பானி கொடுக்க வேண்டும், ஏனெனில், அவர் ஒரு வாஜிபான அம்சத்தினை விட்டுவிட்டார். ஹஜ் மற்றும் உம்ரா நிறைவேற்றுவதற்காக விமானங்களில் வருபவர்கள் விமானங்களில் ஏறுவதற்கு முன்பாகவே குளித்துவிட்டுத் தயாராக இருக்க வேண்டும், மீஃகாத்தை நெருங்கும்போது அவர்கள் இஹ்ராம் அணிந்து கொள்ளவேண்டும் மற்றும் தல்பிய்யஹ் சொல்லவேண்டும். இருப்பினும், விமானங்களில் ஏறுவதற்கு முன்பாகவே இஹ்ராம் அணிந்து கொண்டாலும் தவறில்லை. நிய்யத் செய்யத்தேவையில்லை, தல்பிய்யஹ்வும் சொல்லத்தேவையில்லை, நிய்யத்தும் தல்பிய்யஹ்வும் மீஃகாத்தை நெருங்கும்போது மட்டும் சொல்லவண்டும்.

* * *

www.uzairfalahi.com